24.01.2025.

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

அமர்வு வழக்கு எண்.375/2021

அ.சா.10

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கனகா | | |
| க/பெ | கஜேந்திரன் | | |
| கிராமம் | திருக்கனூர் | தொழில் | |
| தாலுக்கா | திருக்கனூர் | வயது | 65/2025 |
| மாவட்டம் | புதுவை | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

முதல் விசாரணை

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது எங்கள் ஊர் ஏரிக்கரையிலுள்ள சிறிய மாரியம்மன் கோயிலில் குறி சொல்லும் தொழில் செய்து வருகிறேன். அந்த கோயிலுக்கு நிறைய பேர் வருவார்கள் செல்வார்கள். அனைவரையும் என்னால் ஞாபகம் வைத்துக்கொள்ள முடியாது. இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட , ஆஜர் ஆண் எதிரி ( 2ம் எதிரி) அங்கு பார்த்ததாக எனக்கு ஞாபகம் இல்லை. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு வேறு எதுவும் தெரியாது. இது சம்மந்தமாக என்னை காவல் துறையினர் விசாரணை செய்யவில்லை.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

நான் அந்த கோயிலில் குறி சொல்லும் காலத்தில் கடந்த 25/04/2011 ந் தேதிக்கு முன்பு 2 நாட்கள் ஒரு ஆண் நபர் அங்கு தங்கியிருந்தாகவும், அவரது பெயரை கேட்க அவர் சிவபெருமான் பாளையத்தை சேர்ந்த ஐய்யப்பன் என்று சொன்னார் என்றும்,

அன்று மதியம் சுமார் 11 மணியளவில் 2 நபர்கள் வந்து அங்கு தங்கியிருந்த ஐய்யப்பனை அழைத்து சென்றார்கள் என்றும், அவர்களை நான் கேட்க தங்கள் பெயர் அதே ஊரைச் சேர்ந்த சரவணன், சரத்குமார் என்று கூறினார்கள் என்றும், அப்போது ஐய்யப்பன் விஜயகுமாரியை தாக்கி காயப்படுத்தி விட்டு வந்து மறைந்திருப்பதாக கூறினார்கள் என்றும், பின்பு அவர்கள் இருவரும் அவர்களை இருசக்கர வாகனத்தில் அழைத்து சென்று விட்டார்கள் என்றும், இது குறித்து காவல் துறையினர் என்னை விசாரித்தார்கள் என்றும், விசாரணையில் மேற்படி விவரங்களை சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டுக்கொண்டதன் பேரில் அவர்களை காப்பாற்றும் பொருட்டு உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

**இல்லை.**

**மறுவிசாரணை**

**இல்லை**